**மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2016**

-----------------------------------------------------------------------------------------------

மக்கள் வங்கியினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் ("தொகுதி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், இலாப நட்டக்கூற்று மற்றும் முற்றுமடங்கிய ஏனைய வருமானக்கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் – வங்கி

மக்கள் வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் – தொகுதி**

தொகுதியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கி மற்றும் அவற்றிக்கான தொடர்ச்சியான திருத்தங்களினால் வேண்டப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

வங்கியின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் வங்கியின் முக்கிய பகுதியாக இருக்கின்ற உள்நாட்டு வங்கியியல் பிரிவுகள், கடல்கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை கொண்டுள்ளது. தொகுதி நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக்கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகள் என்பவற்றின் திரண்ட நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. வங்கியானது ஐந்தொகையிலுள்ளவாறு வரையறுத்த பீப்பிள் ரவல்ஸ் (தனியார்) கம்பனியில் 99 சதவீத பங்கு மூலதனம், வரையறுத்த பொது பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனியில் 75 சதவீத பங்கு மூலதனம், வரையறுக்கப்பட்ட பீப்பிள் மேச்சன்ற் பினான்ஸ் பிஎல்சீயில் 50.16 சதவீத பங்கு மூலதனம் மற்றும் வரையறுத்த ஸ்மாற் நெற் லங்கா (தனியார்) கம்பனியில் இல் 37.3 சதவீத பங்கு முலதனம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு கம்பனி தொடர்பில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் உரிமையாண்மை பின்வருமாறு இருந்தது.

| | நேரடி முதலீடுகள் | | | |
|---|---|---|---|---|
| | **2016** | **சதவீதம்** | **2015** | **சதவீதம்** |
| **துணைக்கம்பனிகள்** | **ரூபா.000** | | **ரூபா.000** | |
| வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் ரவல்ஸ் (தனியார்) கம்பனி | 4,950 | 99 | 4,950 | 99 |
| வரையறுக்கப்பட்ட பீப்பிள் லீசிங் அன்ட் பினான்ஸ் பொதுக் கம்பனி | 690,958 | 75 | 840,958 | 75 |
| வரையறுக்கப்பட்ட பீப்பிள்ஸ் | 629,858 | 50.16 | 629,858 | 50.16 |

| | | | | |
|---|---|---|---|---|
| மேச்சன்ற் பினான்ஸ் பொதுக் கம்பனி | | | | |
| **துணைக்கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடு** | **1,325,766** | | **1,475,766** | |
| **இணைந்த கம்பனிகள்** | | | | |
| வரையறுக்கப்பட்ட ஸ்மாற் நெற் லங்கா (தனியார்) கம்பனி | **25,000** | **37.3** | **25,000** | **37.3** |
| கழி:நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | (25,000) | - | (25,000) | - |
| **இணைந்த கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடு** | **-** | | **-** | |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச் சட்டம் | |
| (i) 12(1) ஆம் பிரிவு | வங்கியின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 20,000,000 சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கியானது 999,960 பங்குகளை மாத்திரமே வழங்கியிருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை விஞ்சிய 143,040,000 பங்குகளிற்கு ரூபா 7,152 மில்லியன் தொகையான மூலதன செலவு பங்கீடு இருந்தது. எவ்வாறாயினும், மக்கள் வங்கியினுடைய அதிகாரச்சட்டத்தை திருத்துவதன் மூலம் இன்னமும் அதிகரிக்கப்படாத அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்காக பங்கீடு செய்யப்பட காத்திருக்கும் மூலதனக் கணக்கில் ரூபா 7,152 மில்லியன் தொகை இடம் பெற்றிருந்தது. |
| (ii) 20 ஆம் பிரிவு | நிதியமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரின் அதிகாரம் இன்றி வங்கியினால் எவ்வித தொகுதிக்கடன்களும் விநியோகிக்கப்படலாகாது. எவ்வாறாயினும், அவ்வாறான அங்கீகாரமின்றி ஓய்வூதிய நிதியத்திற்கு ரூபா 10,000 மில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்களை வங்கி விநியோகித்திருந்தது. |
| (ஆ) மக்கள் வங்கியின் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 19(ஆ) பிரிவு | கணக்காய்வு பூர்த்தியானதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திலும் யூன் 30 இற்கு முன்னர் வங்கியின் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2003 இற்கு பின்னர் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. |
| (இ) 808/2009 ஆம் இலக்க வங்கியின் பொது அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கையின் 3.9 ஆம் பிரிவு | இரகசிய இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் விபரங்கள் உள்ளடங்களாக பதிவேடொன்று பேணுதல் மற்றும் இரட்டைக் கட்டுப்பாட்டின் கீழ் கிளை முகாமையாளர்களினால் பேணவேண்டிய போதிலும், இந்த ஏற்பாட்டுடன் வங்கி இணங்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | வங்கியின் கடன் செயன்முறை கையேடு | |
| (i) | 2.1.8 (தலைப்பு 4) ஆம் பிரிவு மற்றும் 3.1 (தலைப்பு 5) ஆம் பிரிவு | பிரயோகிக்கும் வசதியின் நோக்கம் பரீட்சிப்பொன்றினால் சரிபார்க்கப்பட வேண்டியதுடன் தேவையான ஆவணங்களினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பரீட்சிப்பொன்றினை வங்கி மேற்கொண்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் வசதியினை செயற்படுத்துவதற்கு முன்னர் தொடர்புடைய ஆவணங்களினைப் பெற்றிருந்ததா என்பதைனை நிச்சயப்படுத்துவதற்கு எவ்வித ஆவணங்களும் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2.5.1 (தலைப்பு 4) ஆம் பிரிவு | வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு முரணாக, சில சந்தர்ப்பங்களில் எவ்வித பாதுகாப்பினையும் பெற்றிராது வங்கி கடன்களினை அளித்திருந்தது. |
| (iii) | 09 ஆம் பிரிவு | அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது கிளை முகாமையாளர்களுக்கு பரிந்துரைத்து தீர்மானிக்கப்பட்ட எல்லைகளினை மிகைத்து வாடிக்கையாளர்களுக்கு பதினொரு சந்தர்ப்பங்களில் சில கிளைகள் தற்காலிக வங்கி மேலதிகப்பற்று வசதிகளினை அளித்திருந்நமை, தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயலற்ற நிலைமையில் ரூபா 128,188,494 கூட்டுத்தொகையான அவ்வாறான வசதிகள் வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. |
| (iv) | 9.7.3 ஆம் பிரிவு | தற்காலிக மேலதிகப்பற்று வசதிகளுக்கான அங்கீகாரத்திற்கான விபரங்கள் உள்ளடங்களாக தனியானதொரு இடமாற்ற புத்தகமொன்றினை கிளை பராமரிக்கவேண்டிய போதிலும், சில சந்தர்ப்பங்களில் அந்தப் புத்தகத்தினை கிளைகள் முறையாகப் பராமரித்திருக்கவில்லை. |
| (v) | 25.3.3 ஆம் பிரிவு | சில சந்தர்ப்பங்களில் வங்கியினால் வாடிக்கையாளர்கள் மீது இடர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வங்கியின் இடர் கட்டுப்பாட்டாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட இடர் மீள்செலுத்துகை அறிக்கைகளினை கருத்திற்கொள்ளாது வங்கி நிரந்தர வங்கி மேலதிகப்பற்று வசதிகளினை வழங்கியிருந்தது. |
| (vi) | 2016 சனவரி 20 ஆந் திகதிய 550/2000 (84) ஆம் இலக்க வங்கியின் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவு மற்றும் 2.3.3 ஆம் பிரிவு | தவணைக் கடன்களின் வட்டி வீதங்கள் 13 சதவீதம் தொடக்கம் 14 சதவீதம் வரையான (பிணையங்கள் மீது) வீச்சில் காணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், எவ்வித பிணையினையும் பெற்றுக்கொள்ளாது 8.75 சத வீதமான தாழ்ந்த விகிதமொன்றில் வங்கி மேற்குறித்த கடன்களினை அளித்திருந்தது. |
| (உ) | 634/2015 மற்றும் 44/2016 ஆம் இலக்க சபை பத்திரங்கள் | வங்கியினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் இரண்டு கட்டங்களில் கடன்கள் விடுவிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ஒரு கட்டத்தில் ரூபா 10 பில்லியன் முழுமையான கடனினை வங்கி விடுவித்திருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் முறையே 19,520 மில்லியன் மற்றும் ரூபா 24,121 மில்லியன் நேரொத்த வரிக்கு முந்திய தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 20,814 மில்லியன் மற்றும் ரூபா 25,433 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையினால் வங்கி மற்றும் தொகுதிகளின் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 1,294 மில்லியன் மற்றும் ரூபா 1,312 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ஏனைய வருமானம் அதிகரித்தமை மற்றும் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான நட்டக்கழிவு குறைவடைந்தமை என்பன இதற்கான பிரதான காரணமாகவிருந்தது.

வங்கி மற்றும் தொகுதியின் ஆண்டுக்கான இலாபம் முறையே ரூபா 14,995 மில்லியன் மற்றும் ரூபா 17,956 மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், ஊழியர்களின் ஊதியம், பெறுமானத்தேய்வு மற்றும் அரசுக்கு செலுத்தப்பட்ட வரிகள் என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர் வங்கி மற்றும் தொகுதியின் பெறுமதி சேர்க்கை முறையே ரூபா 45,393 மில்லியன் மற்றும் ரூபா 53,638 மில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் பெறுமதி சேர்க்கை முறையே ரூபா 43,977 மில்லியன் மற்றும் ரூபா 50,263 மில்லியனாகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

2015 இல் ரூபா 14,860 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2016 இல் ரூபா 20,569 மில்லியன் இலாபமொன்றினை வங்கியின் கிளை வலையமைப்பு அறிக்கையிட்டது. மீளாய்வாண்டின்போது 05 கிளைகளினால் ரூபா 17 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்ட அதேவேளை 342 கிளைகளினால் ரூபா 20,586 மில்லியன் இலாபம் உருவாக்கப்பட்டிருந்தது.

#### 3.2.2 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

அனுமதிபெற்ற வர்த்தக வங்கிகளுக்கான துறைசார் விகிதங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு முன்யை ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான வங்கியின் சில முக்கிய விகிதங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு.

(அ) 2016 ஆம் ஆண்டில் வங்கியின் தேறிய இலாப விகிதம் 12.28 சதவீதமாக அறிக்கையிடப்பட்டதுடன் 17.87 சதவீதமான துறை விகிதத்துடன் ஒப்பிடுகையில் தாழ்வானதாகக் காணப்படுகின்றது.

(ஆ) வங்கியின் மூலதன போதுமை விகிதம் (தட்டு 1) 2015 ஆம் ஆண்டில் 9.9 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 9.8 சதவீதத்திற்கு குறைவடைந்தது. மூலதன போதுமை விகிதம் (தட்டு 1 + தட்டு 2) கூட 2015 ஆம் ஆண்டில் 12.5 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 12.1 சதவீதத்திற்கு குறைவடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட குறிப்புரையின் பிரகாரம் இந்த விகிதங்களினை முறையே 5 சதவீதம் மற்றும் 10 சதவீத மட்டமொன்றில் வங்கி பேணுதல் வேண்டும்.

(இ) வங்கியின் உள்நாட்டு வங்கியியல் அலகின் திரவத்தன்மை விகிதத்தினை 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 26.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2016 இல் 21.73 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஈ) மொத்தக்கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் 14.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த வைப்புக்கள் 19.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 4.1 செயலாற்றல்

-----------------------

பாதிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத அதிகரிப்பொன்றுடன் 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 122,114 மில்லியன் மொத்த வருமானமொன்றினை வங்கி உழைத்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கு அமைக்கப்பட்ட இலக்குகளுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் வாடிக்கையாளர் வைப்புக்கள் முறையே ரூபா 3,945 மில்லியன் வீழ்ச்சியொன்றினையும் மற்றும் ரூபா 52,372 அதிகரிப்பினையும் பதிவு செய்திருந்தது. வங்கியினூடாக ரூபா 1,307,128 மில்லியன் மொத்த சொத்துக்களினை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,302,048 மில்லியன் சொத்துக்களினை மாத்திரம் உழைப்பதற்கு முடியுமாகயிருந்தது.

### 4.2 கடன் நிர்வாகம்

------------------------------

#### 4.2.1 செயலற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள்

-------------------------------------------------------------------------

**(அ) அனிலானா ஹோட்டல்ஸ் மற்றும் புரப்பெட்டீஸ் லிமிட்டட் இற்கான கடன்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு ஆதனங்களின் ஆரம்ப அடமானத்திற்கு எதிராக பணிச்சங்கேனியில் (மட்டக்களப்பு மாவட்டம்) 5 கிராமிய வீடுகளின் (villas) நிர்மாண நோக்கத்திற்கு 1½ வருடங்கள் தயவுக் காலம் உள்ளடங்களாக 4 வருடங்கள் காலப் பகுதியொன்றுக்கு 2012 ஆகஸ்ட் 24 இல் ரூபா 108 மில்லியன் தவணைக் கடன் வசதியொன்றினை வங்கி வழங்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து 2015 பெப்ரவரி 23 இல் இந்த கடன் செயலற்றதாக வகைப்படுத்தப்பட்டதுடன் 2016 யூலை 21 இல் உள்ளவாறான வருமதியாகவுள்ள தொகை ரூபா 106,500,125 ஆன மூலதன பகுதி மற்றும் ரூபா 23,407,951 ஆன வட்டி மற்றும் ஏனையவை உள்ளடங்களாக ரூபா 129,908,076 ஆகக் காணப்பட்டது

(ii) கடன் வழங்கும் போது பாதுகாக்கப்பட்ட ஆதனங்கள் மீது சமர்ப்பிக்கப்பட்ட விலைமதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம், ரூபா 58 மில்லியன் தொடக்கம் ரூபா 250 மில்லியன் வரை ஆதனங்களின் பெறுமதியில் வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2015 யூலை 03 இல் உள்ளவாறான ஆதனத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதி ரூபா 120 மில்லியனாக மாத்திரம் காணப்பட்டது. அதற்கமைய, ரூபா 129.9 மில்லியன் மொத்த நிலுவை மீதி கட்டாய விற்பனை பெறுமதியினை விட ரூபா 9.9 மில்லியனால் மிகைத்திருந்தது.

(iii) இந்த கடன் தொடர்பில் திருப்திகரமான அறவீட்டு நடவடிக்கைகளினை எடுப்பதற்கு வங்கி தவறியிருந்தமை, மேலும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) றுகுனு டெவலப்மட் கென்ஸ்ரக்ஸன் & என்ஜினியரிங் (பிரைவட்) லிமிட்டட் இற்கான கடன்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆர்டீஏ இலிருந்து குறித்த கம்பனிக்கு ரூபா 533 மில்லியன் நிலுவையாக காணப்படுகின்றமையை உறுதிப்படுத்தி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் (ஆர்டீஏ) வழங்கப்பட்ட கடிதத்திற்கு எதிராக 2014 திசெம்பர் 10 இல் வங்கியினால் ஆறு மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு ரூபா 500 மில்லியன் தற்காலிக மேலதிகப்பற்று வசதியொன்று (ரீஓடீ) அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செலுத்துகைகளினை பெறுவதில் தாமதங்கள் காரணமாக, 11 சதவீத வட்டி விகிதமொன்றுடன் 12 மாதங்களினால் கடன் மீள்செலுத்தல் காலப்பகுதியினை நீடிப்பதற்கு வங்கி தீர்மானித்திருந்ததுடன் வருமதியாகவுள்ள மீதியினை குறுங்கால கடன் வசதியொன்றாக மாற்றுவதற்கு அங்கீகாரமொன்று வழங்கப்பட்டது.

(ii) அதனைத்தொடர்ந்து, 2016 சனவரி 07 இல் வசதி செயலற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 யூலை 27 வரையேனும் ரூபா 301,356,434 மூலதனப் பகுதி மற்றும் ரூபா 1,905,706 வட்டி மற்றும் ஏனையவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்ட ரூபா 303,262,140 அறவிடப்படாது தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்படுகின்றது. வங்கியினால் மேற்குறித்த கடன் வசதியின் மீள்பட்டியலுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 299 மில்லியனுக்கு மூலதன நிலுவை குறைக்கப்பட்டது.

(iii) 2016 யூலை 27 உள்ளபடியான மேற்குறித்த கடனின் மூலதன நிலுவை ரூபா 301,356,434 ஆகக் காணப்பட்ட போதிலும், ஆர்டீஏ இனால் விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 2015 ஒக்தோபர் 07 இல் உள்ளபடியான ஆர்டீஏ இலிருந்து மேற்குறித்த கம்பனிக்கான நிலுவைத்தொகை ரூபா 35,626,901 ஆக மாத்திரம் காணப்பட்டது. அதற்கமைய, கடன் நிலுவைத் தொகையினை பாதுகாப்பதற்கு பிணைகளின் மொத்த தொகை போதுமையற்றதாகக் காணப்படாமை குறிப்பிடத்தக்கது.

*''நிலுவை மீதி ரூபா 299 மில்லியன் ஆக மீளபட்டியல்படுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 30 மில்லியன் ஆதன அடமான பத்திரம் மற்றும் பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதத்தின் மூலம் மேலதிமாகப் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது. மீள்-கட்டமைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பத்திரத்தின் பிரகாரம் இணங்கப்பட்டதற்கு அமைய ரூபா 5 மில்லியன் மாதாந்த செலுத்துகையினையும் ஒவ்வொரு தள்ளுபடி சிட்சைகளிலிருந்தும் 5 சதவீதத்தினை கம்பனி மேற்கொள்கின்றது. அதற்கமைய, வட்டியினை நோக்கியதாக ரூபா 12.75 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 295.8 மில்லியனுக்கு மூலதன நிலுவை குறைக்கப்பட்டுள்ளது, என இது தொடர்பில் வங்கி எனக்கு அறிவித்துள்ளது.''*

(iv) 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட கடிதத்தின் பொது நிபந்தனைகளின் பிரகாரம், ஆர்டீஏ இலிருந்து வருமானத்தைப் பெறுவதில் ஏதேனும் தாமதங்கள் ஏற்பட்டால் சொந்த நிதியத்திலிருந்து குறுங்கால கடனினை தீர்ப்பனவு செய்வதற்கு கடன்பெற்றவர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் 2016 யூலை 27 ஆன கணக்காய்வு திகதி வரையிலும் கம்பனியிலிருந்து கடனை அறவிடுவதற்கு வங்கி எவ்வித நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை.

**(இ) புரப்பட்டி பைனான்ஸ் & இன்வெஸ்மென் கண்டி (பிரைவட்) லிமிட்டட் இற்கான கடன்**

2009 சனவரி 27 இல் மேற்குறித்த கம்பனிக்கு ரூபா 150 மில்லியன் தவணைக் கடனொன்றினை வங்கி வழங்கியிருந்ததுடன் 2009 ஏப்ரல் 30 இல் செயலற்றதாக வகைப்படுத்தப்பட்டது. 2016 யூலை 21 இல் உள்ளவாறான கடன் மொத்த நிலுவை மீதி ரூபா 116,288,500 மூலதனம் ரூபா 183,062,124 வட்டி மற்றும் ரூபா 24,648,531 அபராதக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ரூபா 323,999,155 ஆகக் காணப்பட்டது. 2016 திசெம்பர் 31 வரையிலும் மேற்குறித்த கடனின் மூலதன நிலுவை மீதி சமமாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**(ஈ) சிட்டி கென்ஸ்ரக்சன் கென்டரக்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் இற்கான கடன்**

2012, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது மேற்குறித்த கம்பனிக்கு ரூபா 782.7 மில்லியன் கூட்டுத்தொகையான 05 கடன் வசதிகளினை வங்கியின் லிபர்ட்டி பிளாஸா கிளை வழங்கியிருந்ததுடன் அதனைத்தொடர்ந்து, வசதிகள் செயலற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த வசதிகளின் மொத்த நிலுவை மீதி ரூபா 745.40 மில்லியன் மூலதனப் பகுதி மற்றும் ரூபா 374.79 மில்லியன் வட்டி மற்றும் அபராதக் கட்டணங்கள் உள்ளடங்களாக ரூபா 1,120.19 மில்லியனாகக் காணப்பட்டது.

**4.2.2 போதுமையற்ற பிணைகளுடன் வழங்கப்பட்ட கடன்கள்**

போதுமான பிணைகளினைப் பெற்றுக்கொள்ளாது 03 கடன் வசதிகள் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்தக் கடன் வசதிகளின் மூலதன நிலுவை ரூபா 441,242,071 ஆகக் காணப்பட்டது.

**4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் வங்கிக்கு ரூபா 180.45 மில்லியன் மொத்த நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **விபரம்** | **2015 சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை** | **மொத்த நட்டம்** | **2016 சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை** | **மொத்த நட்டம்** |
|---|---|---|---|---|
| | | **ரூபா.** | | **ரூபா.** |
| உள்ளக மோசடிகள் | 05 | 7,057,900 | 12 | 10,283,659 |
| வெளியக மோசடிகள் | 312 | 63,143,451 | 236 | 52,296,464 |
| வாடிக்கையாளர், உற்பத்தி மற்றும் வியாபார செயற்பாடுகள் | - | - | 06 | 367,584 |
| பௌதீக சொத்துக்களுக்கு சேதம் | 02 | 111,805 | 09 | 1,068,512 |
| வியாபார இடையூறு மற்றும் முறைமை தோல்விகள் | - | - | 04 | 638,160 |
| நிறைவேற்றல், விநியோகம் மற்றும் செயல்முறை முகாமைத்துவம் | 43 | 32,375,071 | 78 | 13,105,652 |
| **மொத்தம்** | | **102,688,227** | | **77,760,031** |

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த செயற்திட்டங்களின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கு தவறியதன் விளைவாக, ரூபா 3,601,897 ஆன நானாவித செலவினங்கள் ஏற்பட்டதன் பின்னர் வங்கி 03 நிர்மாண செயற்திட்டங்களினை கைவிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **செயற்திட்டத்தின் பெயர்** | **காலப்பகுதி** | **செய்யப்பட்ட வேலையின் விபரம்** | **ஏற்பட்ட செலவினத்தின் தொகை** |
|---|---|---|---|
| | | | **ரூபா.** |
| புத்தளம் பிராந்திய தலைமை அலுவலகம் | 2011-2012 | மண் ஆய்வுகள், விலைமனு ஆவணங்களின் மீளாய்வு & ஆலோசனைக் கட்டணம் | 957,319 |
| உடப்புஸல்லாவ கிளை | 2008-2012 | ஆலோசனைக் கட்டணம் | 1,435,238 |
| இவரிவட்ட சேவை நிலையம் | 2011 | மண் ஆய்வுகள், விலைமனு ஆவணங்களின் மீளாய்வு & ஆலோசணைக் கட்டணம் | 1,209,340 |
| **மொத்தம்** | | | **3,601,897** |

**(ஆ) தற்காலிகமாக நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

03 கிளை வளாகத்தினை நிர்மாணிப்பதற்கு வங்கி ஏற்கனவே தீர்மானித்து பாதிட்டிருந்ததுடன் அதனைத்தொடர்ந்து, உயர் கிரயம் காரணமாக ரூபா 1,575,147 தொகையான நானாவித செலவீனங்கள் ஏற்பட்டதன் பின்னர் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பெறுகைகள் திட்டம்**

பெறுகைகள் திட்டமொன்றினை தயாரிக்காது வங்கி மூலதன பாதீடொன்றை மாத்திரம் தயாரித்திருந்தது.

**5.2 மனித வளங்கல் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டமின்றி (எஸ்ஓஆர்), அந்தந்த பதவிகளுக்கு அதிக பொருத்தமான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குடன் நிறைவான நபர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வங்கி தவறியிருந்தது.

(ஆ) பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் / பொது முகாமையாளர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம், திறைசேரி தலைவர், சந்தைப்படுத்தல் தலைவர், நிதித்தலைவர் மற்றும் தகவல் தொழிநுட்ப தலைவர் போன்ற வங்கியின் முக்கிய பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 06 ஊழியர்களினை வங்கி நியமித்திருந்தது. எவ்வாறாயினும், பின்வரும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அந்த பதவிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(i) முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை.
(ii) முற்தீர்மானிக்கப்பட்ட ஊதிய கொள்கை (சம்பளங்கள், மிகையூதியம், படிகள் மற்றும் ஏனைய செலுத்துகைகள்).
(iii) வேலை விபரணம்.
(iv) பதவியுயர்வு நடைமுறை.
(v) முற்தீர்மானிக்கப்பட்ட தகைமைகள், அனுபவங்கள், வயதெல்லை மற்றும் ஆட்சேர்ப்பு முறைமை.
(vi) தொடர்தேர்ச்சியான திட்டம்.
(vii) செயலாற்றல் மதிப்பிட்டு முறைமை.
(viii) விரிவாக்கல் கொள்கை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிசார் உபகரணங்களின் கணக்கீடு | (i) முதிர்வுக்குள் காணப்பட்ட நிதிசார் சொத்துக்களின் பெறுமதி மற்றும் திறைசேரி முறி மற்றும் திறைசேரி பத்திரங்களின் மீதி கீழ்கொண்டு சென்ற வியாபார கலவையின் தொகை (எவ்வீரீபிஎல்) வினைத்திறனான வட்டி விகிதத்தினை (ஈஜஆர்) பயன்படுத்துவதற்குப் பதிலாக திரண்ட வட்டி முறை மற்றும் எளிய வட்டி முறைமையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்தது.<br><br>(ii) குழமத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி இடர் முகாமைத்துவம் தொடர்பில் குழ நிதி இடர் முகாமைத்துவ வெளிப்படுத்தல்கள் குறிப்பில் உள்ளடக்கப்படவில்லை. |
| (ஆ) தொங்கல் கணக்குகள் | கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் கீழ் ஏனைய கடன்களாக வகைப்படுத்தப்பட்டுக் காணப்பட்ட நீண்டகால வருமதியான இணங்கச் செய்யப்படாத தொங்கல் கணக்குகள் தெளிவாக்கப்படாது காணப்படுகின்றமை. |

| | | |
|---|---|---|
| (இ) | கடன் நிர்வாகம் மற்றும் நட்டக்கழிவு கணிப்பீடு | • நீண்டகால வருமதியான செயலற்ற கடன்கள்<br>• பிணைகள் இன்றி மற்றும் போதியளவான பிணைகளின்றி கடன்கள் அளிக்கப்பட்டுள்ளமை<br>• எழுத்துமூலமான கொள்கை கையோட்டில் குறிப்பிடப்பட்ட நட்டக்கழிவு விபரங்களின் பற்றாக்குறை கணிப்பீடுகள்<br>• சமீபத்திய மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் சமீபத்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பற்றாக்குறை. |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | • ஒரு கிளையிலிருந்து மற்றுமொரு கிளைக்கு நிலையான சொத்துக்களினை மாற்றும் பொழுது, தொடர்புடைய பதிவுகளில் மாற்றீடுகை பதிவுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.<br>• இடத்திற்கு விநியோகித்ததன் பின்னர் மாத்திரமே சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டுகின்றமை.<br>• களஞ்சியத்திலுள்ள மந்தமான நகர்வுள்ள மற்றும் வழக்கற்றுப்போன சொத்துக்களினை இனங்காண்பதற்கான முறையான கொள்கை காணப்படாமை.<br>• ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண வேலைகள் மூலதன நடைமுறை வேலையில் தொடர்ந்தும் காணப்படுகின்றமை. |
| (உ) | தகவல் முறைமை | • முறைமையில் பாதுகாப்பு விபரங்களினை நாளதுவரையாக்குவதற்கு தவறியமை.<br>• தரவு நிலையத்துடன் சில அடகு நிலையங்கள் இணைக்கப்படாமை. |